# கொளத்தூர் சட்டமன்ற தொகுதியில் உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாம்!

## அமைச்சர் பி.கே.சேகர்பாபு பயனாளிகளுக்கு உரிய ஆவணங்களை வழங்கினார்!




சென்னை, செப். 5-

'மக்களிடம் செல்; அவர்களோடு வாழ்; அவர்களை நேசி' என்ற பேரறிஞர் அண்ணாவின் கொள்கைப் பாதையில் நமது தமிழ்நாடு அரசு மக்களின் மீது கொண்டிருக்கும் அக்கறைக்கு மற்றுமொரு எடுத்துக்காட்டாக "உங்களுடன் ஸ்டாலின்" என்ற புதிய திட்டத்தினை முதலமைச்சர் அவர்கள் அறிவித்ததால் தமிழ்நாட்டில் உள்ள கடைகோடி மக்களுக்கும், அவர்கள் அன்றாடம் அணுகும் அரசுத் துறைகளின் சேவைகள் / திட்டங்களை குறிப்பாக சாதி சான்று பெற, பட்டா மாற்றம் செய்ய, பென்சன் வாங்க, மகளிர் உரிமைத் தொகை திட்டத்தில் தகுதி வாய்ந்த விடுபட்ட மகளிர் பயன் பெற, மருத்துவ காப்பீட்டு அட்டை பெற, ஆதார் அட்டையில் திருத்தங்கள் செய்ய, ரேசன் அட்டையில் முகவரி திருத்தம் செய்ய" போன்ற பல கோரிக்கைகளுக்கு அரசு அலுவலகங்களுக்குச் செல்ல வேண்டிய அவசியமின்றி அலுவலர்கள் நேரடியாக உங்கள் இருப்பிடங்களுக்கு அருகிலேயே வந்து தீர்வுகளை வழங்கும் உன்னத திட்டமான உங்களுடன் ஸ்டாலின் திட்டம் இன்று கொளத்தூர் சட்டமன்றத் தொகுதியில் மண்டலம் 6 வார்டு-64 சென்னை, சீனிவாசன் நகர் மூன்றாவது பிரதான சாலையில் உள்ள பழைய பள்ளி கட்டிடத்தில்

நேற்று (4/09/2025) வியாழக்கிழமை நடைபெற்ற "உங்களுடன் ஸ்டாலின்" திட்ட முகாமினை இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சரும், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான திரு. பி.கே.சேகர்பாபு அவர்கள் பல்வேறு கோரிக்கைகளுக்காக முகாமில் பங்கேற்ற பயனாளிகளுக்கு குறிப்பாக

மின் இணைப்புகளுக்கான நுகர்வோர் பெயர் மாற்றம். 12 மனுக்கள் பெறப்பட்டு அந்த... மனுக்களுக்கும் தீர்வு கண்டும்

CMCHIS முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீட்டுத் திட்டம் 200 மனுக்கள் பெறப்பட்டு அந்த... மனுக்களுக்கும் தீர்வு கண்டும்..

ஆதார் இணைய சேவைகள் மனு 60 பெறப்பட்டு அந்த... மனுக்களுக்கும் தீர்வு கண்டும்

பிறப்பு மற்றும் இறப்பு சான்றிதழ்களில் பெயரை சேர்க்க மற்றும் திருத்தம் செய்ய கோரி - 5 மனுக்கள் பெறப்பட்டு அந்த... மனுக்களுக்கும் தீர்வு கண்டும்

சொத்து வரியை மதிப்பிடுவதற்கான விண்ணப்பங்கள் மற்றும் பெயர் மாற்றம் செய்ய கோரி 9 மனுக்கள் பெறப்பட்டு அந்த... மனுக்களுக்கும் தீர்வு கண்டும், பட்டா நில அளவை 65 மற்றும் பெயர் மாற்றுதல் பெறப்பட்டு அந்த... மனுக்களுக்கும் தீர்வு கண்டும், சமூகப் பாதுகாப்புத் திட்டங்கள் (SSS) - ஓய்வூதியத் திட்டங்கள் / முதல்வர் மருத்துவ காப்பீட்டுத் திட்டம் - 236 மனுக்கள் பெறப்பட்டு

அந்த... மனுக்களுக்கும் தீர்வு கண்டும்

ஆதரவற்ற குழந்தைகளுக்கான உணவுகள் நிதியுதவி திட்டம் - 2 மனுக்கள் பெறப்பட்டு தீர்வு கண்டும்

மாற்றுத்திறனாளிகளுக்கான தேசிய அடையாள அட்டை/ மாற்றுத்திறனாளிகளுக்கான தனிப்பட்ட அடையாள அட்டை -5 விண்ணப்பம் பெறப்பட்டு தீர்வு கண்டும்

கலைஞர் மகளிர் உரிமை தொகை -540 மனுக்கள் பெறப்பட்டு தீர்வு கண்டும்

இதர மனுக்கள் -70 என மொத்தமாக 1462 மனுக்கள் பெறப்பட்டு அதில் 1453 மனுக்களுக்கு தீர்வு காணப்பட்டு அதற்குரிய ஆவணங்களை உரிய பயனாளிகளிடம் வழங்கி சிறப்பித்தார்.

இந்நிகழ்ச்சியில் பகுதி கழக செயலாளர் எ.நாகராசன் எம்.சி மண்டல குழு தலைவர் சரிதா மகேஷ் குமார், மண்டல அலுவலர் சரவணன் வட்டக் கழக செயலாளர்கள் எஸ்.முருகன், எம்.டி.தமிழ் செல்வன் மற்றும் வட்டக் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



சேலம் மாவட்டம், சன்னியாசிகுண்டு குமரகிரி தண்டாயுதபாணி சுவாமி திருக்கோவில் மலைப்பாதை சீரமைத்தல் மற்றும் கோவில் திருமதில் அமைக்கும் பணிகளை சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் நேற்று (04.09.2025) தொடங்கி வைத்தார்கள். உடன், மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் இரா.பிருந்தாதேவி, மாநகராட்சி மேயர் ஆ.இராமச்சந்திரன், சேலம் நாடாளுமன்ற உறுப்பினர் டி.எம்.செல்வகணபதி, அறங்காவலர்கள் குழுத்தலைவர் ஏ.ஏ.ஆறுமுகம், இந்து சமய அறநிலையத்துறை இணை ஆணையர் திருமதி வே.சபர்மதி உள்ளிட்ட தொடர்புடைய அலுவலர்கள் உள்ளனர்.

## நிகழ்ச்சி ஏற்பாடு : முனைவர் பொன். கதிரேசன்!

# ஆசிரியர்கள் தின பெரு விழா-முத்தமிழறிஞர் கலைஞர் 102வது பிறந்தநாள் விழா!

## கே.ஆர்.என்.ராஜேஷ் குமார் எம்.பி., அமைச்சர் மா. மதிவேந்தன், வி.எஸ். மாதேஸ்வரன் எம்.பி.- ரெ.தங்கம் பங்கேற்பு!

நாமக்கல், செப்.5 -

பன்னாட்டு தமிழ் ஆளுமையர்கள் கூட்டமைப்பு, தமிழ்நாடு மாற்றுத்திறனாளிகள் முன்னேற்ற சங்கம், மாற்றுத்திறனாளிகளுக்கான கல்வி விழிப்புணர்வு தொண்டு நிறுவனம்,

பன்னாட்டு மாற்றுத்திறன் ஆசிரியர்கள் பேராசிரியர்கள், அலுவலர்கள் நல சங்கம் இணைந்து நடத்தும் முத்தமிழ் அறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் 102வது பிறந்தநாள் விழா,

மாற்றுத்திறனாளிகளுக்கு எண்ணற்ற திட்டங்களை வழங்கிய முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு நன்றி அறிவிப்பு பெருவிழா, ஆசிரியர்கள் தின விழா,

"நாமக்கல் மாவட்டம் ராசிபுரம், சேலம் ரோட்டில் அமைந்துள்ள சுஜிதா திருமண மண்டபத்தில் இன்று (5.9.2025-வெள்ளிக்கிழமை) காலை 9 மணிக்கு நடைபெறுகிறது".

இவ்விழாவினை நாமக்கல் நாவுக்கரசு, ஆளுமை கருத்தரங்க தலைமை ஒருங்கிணைப்பாளர், பேராசிரியர், டாக்டர் பொன்.கதிரேசன் ஏற்பாடு செய்துள்ளார்.

இவ்விழாவில் நாமக்கல் கிழக்கு மாவட்டக் கழக செயலாளர் கேஆர்என். ராஜேஷ்குமார் எம்பி, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் டாக்டர் மா.மதி வேந்தன், மாவட்ட ஆட்சியர் துர்கா மூர்த்தி, மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர் சு. விமலா, கழக மாற்றுத்திறனாளிகள் அணி மாநிலத் தலைவர் ரெ. தங்கம் ஆகியோர் பங்கேற்று நலத்திட்ட உதவிகளை வழங்கியும், மாற்றுத்திறன் வாழ்வில் வழிகாட்டி நூல்களை வெளியிட்டும்,சிறந்த ஆளுமை ஆசிரியர்களை பாராட்டி சிறப்பித்து சிறப்புரையாற்றுகின்றனர்.

தமிழ்நாடு மாற்றுத்திறனாளிகள் முன்னேற்ற சங்கத்தின் மாநில இணை பொதுச் செயலாளர் என். அம்பாள் குமார் வரவேற்று பேசுகிறார்.

மேலும், இப்பெருவிழாவில் நாமக்கல் நாடாளுமன்ற உறுப்பினர் வி.எஸ். மாதேஸ்வரன், நாமக்கல் சட்டமன்ற உறுப்பினர் பெ. இராமலிங்கம் , சேந்தமங்கலம் சட்டமன்ற உறுப்பினர் கே. பொன்னுச்சாமி, நாமகிரிப்பேட்டை ஒன்றிய செயலாளரும், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் கேபி. ராமசுவாமி, நாமக்கல் மாநகராட்சி மேயர் து.கலாநிதி, சென்னை மாநகர காவல் துணை ஆணையர் பெ. சாமிநாதன், கழக மாநில இளைஞரணி துணைச் செயலாளர் சி.ஆனந்தகுமார், பொதுக்குழு உறுப்பினர் டாக்டர் இரா. மாயவன், மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நலத்துறை அலுவலர் க. கலைச் செல்வி, மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் ப. மகேஸ்வரி, முன்னாள் நீதி அரசர்.விடியல் குகன் என்ற கு.கருணாநிதி, தனித்துணை ஆட்சியர் ச. பிரபாகரன்,ராசிபுரம் நகர்மன்ற தலைவர் முனைவர் ஆர். கவிதா சங்கர், வட்டாட்சியர் க. சசிகுமார் மற்றும் ஆசிரியர் பெருமக்களும், பேராசிரியர் பெருந்தகையர்களும், தமிழ் அறிஞர்களும், ஏராளமான மாற்றுத் திறனாளிகள் பங்கேற்று வாழ்த்துரை வழங்க உள்ளனர்.

கருத்தரங்குகளும் நடைபெற உள்ளன. 700க்கும் மேற்பட்ட மாற்றுத்திறனாளிகளுக்கு நலத்திட்டங்கள் வழங்கப்பட உள்ளன. விழா நிறைவில் பன்னாட்டு தமிழ் ஆளுமைகள் கூட்டமைப்பு மாநில பொருளாளர் முல்லை அ.சரவணன் நன்றியுரை ஆற்றுகிறார்.

## அரசு கலை, அறிவியல் மற்றும் கல்வியியல் கல்லூரிகளில்

# இளநிலை - முதுநிலை பாடப்பிரிவுகளுக்கான மாணாக்கர் சேர்க்கை!

## இணையதள விண்ணப்பப்பதிவு வசதி செப்.30-ந் தேதி வரை செயல்படும்!

## அமைச்சர் கோவி. செழியன் தகவல்!



சென்னை, செப்.5-

அரசு கலை, அறிவியல் மற்றும் கல்வியியல் கல்லூரிகளில் இளநிலை மற்றும் முதுநிலை பாடப்பிரிவுகளுக்கான மாணாக்கர் சேர்க்கைக்கான இணையதள விண்ணப்பப்பதிவு வசதியை 30.09.2025 வரை செயல்படவுள்ளதாக உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் கோவி. செழியன் தெரிவித்துள்ளார்.

இது குறித்து உயர்கல்வித் துறை அமைச்சர் தெரிவித்துள்ளதாவது:

ஏழை, எளிய மாணாக்கர்கள் உயர்கல்வியினை பெற நிதி ஒரு தடையாக இருக்கக்கூடாது என்ற நோக்கோடு புதுமைப் பெண், தமிழ்ப்புதல்வன் திட்டங்களின் மூலம் அரசுப் பள்ளியில் பயின்று உயர்கல்வி சேர்க்கை பெறும் மாணாக்கர்களுக்கு மாதம் ரூ.1000 வழங்கும் திட்டத்தை செயல்படுத்தி வருகிறார், நமது முதலமைச்சர் அவர்கள்.

அதுமட்டுமின்றி உயர்கல்வி பெறும் மாணாக்கர்கள் திறன் வாய்ந்தவர்களாக அவரவர் துறைகளில் முதல்வர்களாக திகழ நான் முதல்வன் திட்டம் மூலம் திறன்மேம்பாடு பயிற்சி வழங்கப்படுகிறது. இதனால் உயர்கல்வியில் மாணாக்கர் சேர்க்கை ஆர்வம் உயர்ந்து வருகிறது.

இதனை கருத்தில் கொண்டு அரசுக் கல்லூரி இல்லாத பகுதிகளில் நடப்பாண்டில் மட்டும் புதியதாக 15 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளை தொடங்கிட தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் ஆணையிடப்பட்டு, அவ்விடங்களில் கல்லூரிகள் தொடங்கப்பட்டுள்ளன. மேலும், மாணவர்களின் தேவைக்கேற்ப 15,000க்கும் மேற்பட்ட மாணாக்கர் சேர்க்கை இடங்கள் பல்வேறு பாடப்பிரிவுகளில் உருவாக்கப்பட்டன.

அரசு கலை, அறிவியல் மற்றும் கல்வியியல் கல்லூரிகளில் இளநிலை, முதுநிலை முதலாமாண்டு மாணாக்கர் சேர்க்கைக்கான விண்ணப்பப் பதிவினை WWW.TNGASA.IN என்ற இணையதள முகவரியில் விண்ணப்பிப்பதற்கு உரிய வழிவகைகள் செய்யப்பட்டு மேற்கண்ட பாடப்பிரிவுகளில் மாணாக்கர் சேர்க்கை பெற்றுள்ளனர்.

இணையதளத்தில் விண்ணப்ப பதிவு மேற்கொள்ள தவறவிட்ட மாணாக்கர்களும் உயர்கல்வி பெற வேண்டும் என்ற நோக்குடன் விண்ணப்ப பதிவு இணையதளம் தொடர்ந்து செயல்பட்டு வருகிறது. இவ்விணையதளம் 30.09.2025 வரை தொடர்ந்து செயல்பட வழிவகை செய்யப்பட்டுள்ளது.

எனவே, இவ்வாய்ப்பினைப் பயன்படுத்தி மாணாக்கர்கள் தாங்கள் சேர விரும்பும் மேற்கண்ட இளநிலை மற்றும் முதுநிலை பாடப்பிரிவுகளில் காலியாக உள்ள இடங்களுக்கு WWW.TNGASA.IN என்ற இணையதளத்தில் 30.09.2025க்குள் விண்ணப்பித்து பயன்பெறுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.



தமிழ்நாடு அரசின் 'உங்களுடன் ஸ்டாலின்' சிறப்பு முகாம், சென்னை, அண்ணாநகர் மண்டலம்–8, 105 வது வட்டம் பகுதியில் நேற்று (4.09.2025) நடைபெற்ற நிகழ்ச்சியில் சென்னை மேற்கு மாவட்ட செயலாளர் நே.சிற்றரசு, அண்ணா நகர் சட்டமன்ற உறுப்பினர் எம்.கே. மோகன், அண்ணாநகர் தெற்கு பகுதி செயலாளர் ந.இராமலிங்கம் ,திமுக மாநில தகவல் தொழில்நுட்ப அணி துணைச் செயலாளர் கார்த்திக் மோகன், வட்டக் கழக செயலாளர் ந.அதியமான் எம்.சி., இரா. பொன்னுரங்கம், மாநகராட்சி மண்டல அதிகாரி சுந்தர்ராஜன், ரமேஷ் ஆகியோர் ஏற்றி துவக்கி வைத்தனர். இந்நிகழ்வில் கழக நிர்வாகிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். இம்முகாமில் ஏராளமான பொதுமக்கள் கலந்துகொண்டு, தங்கள் கோரிக்கை மனுக்களை அளித்தனர்.



சென்னை கிழக்கு மாவட்டம், திரு.வி.க.நகர் வடக்குப் பகுதி கழகச் செயலாளர் செ.தமிழ்வேந்தன் அவர்களின் தாயார் திருமதி செ.முருகம்மாள் இயற்கை எய்தியதையொட்டி, கழகச் சட்டத்துறை இணைச் செயலாளரும் எழும்பூர் சட்டமன்ற உறுப்பினருமான வழக்கறிஞர் இ.பரந்தாமன், அவரது உடலுக்கு மலர் மாலை வைத்து அஞ்சலி செலுத்தினார். எழும்பூர் தெற்குப் பகுதி முன்னாள் செயலாளர் ஜெ.விஜயகுமார், எழும்பூர் தெற்குப் பகுதி முன்னாள் பொருளாளர் ந.கலையரசன் ஆகியோர் உடனிருந்தனர்.

## மாவட்டச் செயலாளர் மயிலை த.வேலு தலைமையில்

# சென்னை தென்மேற்கு மாவட்ட இலக்கிய அணி புதிய நிர்வாகிகள் அறிமுகக் கூட்டம்!

## மாவட்ட அமைப்பாளர் விஜய் வெங்கடேசன் அறிக்கை!

சென்னை, செப். 05-

சென்னை தென்மேற்கு மாவட்ட இலக்கிய அணி சார்பில் மயிலை கிழக்கு - மேற்கு, தியாகராயர் நகர் கிழக்கு - மேற்கு புதிய பகுதி அமைப்பாளர்கள், பகுதி துணை அமைப்பாளர் அறிமுகம் மற்றும் இலக்கிய அணி ஆலோசனை கூட்டம்

சென்னை தென்மேற்கு மாவட்டச் செயலாளர் மயிலை த.வேலு எம்.எல்.ஏ. தலைமையில் இன்று (5.9.2025 - வெள்ளிக்கிழமை) மாலை 6 மணியளவில் சென்னை, மைலாப்பூர் சி.பி.ராமசாமி அலுவலகத்தில் நடைபெறுகிறது.

தியாகராயர் நகர் சட்டமன்ற உறுப்பினர் கிழக்கு பகுதி செயலாளர்

ஜெ.கருணாநிதி எம்.எல்.ஏ., மயிலை மேற்கு பகுதி செயலாளர் நந்தனம் கி.மதி, மயிலை கிழக்கு பகுதி செயலாளர் எஸ். முரளி, தியாகராயர் நகர் மேற்கு பகுதி செயலாளர் கே.ஏழுமலை ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

மாவட்ட இலக்கிய அணி தலைவர் சா. தேவராசு வரவேற்கின்றனர்.

இந்த கூட்டத்தில் மாவட்ட துணை தலைவர், மாவட்ட துணை அமைப்பாளர்கள், பகுதி அமைப்பாளர்கள், பகுதி துணை அமைப்பாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டு கொள்கிறேன்.

பொருள் : கழக பணிகள் குறித்து

இவ்வாறு சென்னை தென் மேற்கு இலக்கிய அணி மாவட்ட அமைப்பாளர் விஜய் வெங்கடேசன் அறிக்கை விடுத்துள்ளார்.



சென்னை தென்மேற்கு மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணியின் ஆலோசனை கூட்டம் மாவட்ட அமைப்பாளர் சிஜடி நகர் ஆர்.குமரன் ஏற்பாட்டில் மாவட்ட செயலாளர் மயிலை த.வேலு எம்.எல்.ஏ தலைமையில் நடைபெற்றது இக்கூட்டத்தில் வர்த்தக அணி மாநில துணைச் செயலாளர் எஸ்.மோகன் விளையாட்டு மேம்பாட்டு அணியின் மாவட்டத் துணை அமைப்பாளர்கள் ஆ.ரவி, எம்.டி.ஆர். பிரகாஷ், இ.சிறைச்செல்வன், த.கண்ணன் மற்றும் பகுதி அமைப்பாளர்கள் பகுதி துணை அமைப்பாளர்கள் கழக தோழர்கள் கலந்து கொண்டனர்.



சென்னை தெற்கு மாவட்டம், மதுரவாயல் சட்டமன்ற தொகுதி, பெருநகர சென்னை மாநகராட்சி,151வது வார்டில் மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளரும், வார்டு மாமன்ற உறுப்பினருமான ச. சங்கர்கணேஷ் ஏற்பாட்டில் இலவச தையல் பயிற்சி நிறைவடைந்த மகளிர்கு கேடயம் மற்றும் சான்றிதழ்கள் வழங்கினார்.



சென்னை வடகிழக்கு மாவட்டம் மாதவரம் சட்டமன்ற தொகுதி புழல் ஒன்றியம் கண்ணம்பாளையத்தை சேர்ந்த கழக செயல்வீரர் கே.அப்பு – திருமதி ஏ.ஜனனி ஆகியோர் இல்ல நிகழ்ச்சி செங்குன்றம் ஜோதி ரேணுகா திருமண மண்டபத்தில் நேற்று நடைபெற்றது இந்நிகழ்வில் சென்னை வடகிழக்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ஆர்.டி.மதன்குமார், நா.ஜெகதிசன், கந்தசாமி, திராவிட டில்லி, செ.யுவராஜ், மணலி ஸ்டாலின், வழக்கறிஞர் செல்வகுமார், டேவிட், எம்.எஸ்மணிகண்டன், குறளரசன், தினேஷ்,டில்லி, ஐயப்பன், ராஜேஷ், பிளாக் இளவரசன், மோசஸ், அசோக், அனீஸ், அப்பாஸ், மதிகர், சுபாஷ், சம்பத், புவியரசன், மோனீஷ், வழக்கறிஞர் கலைநிதி, மல்லி மாநகர் அரவிந்த், மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.